First Semester

# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விப்பீடம்

### பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமாப் பரீட்சை (முழு நேரம்) 2016/2017

### முதலாம் பருவம்

### CU 506 – கற்பித்தல் பொது முறைகள்

**நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

---

1. i. எந்தவொரு முறையையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கற்றல்-கற்பித்தல் செயல்முறையை அது நிகழவேண்டிய விதத்திற்கான படிமுறையை வரிசைக்கிரமமாகக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ii. கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர் சார்பான காரணிகள் நான்கு கூறுக.

(02 புள்ளிகள்)

iii. 'ஏதாவதொரு கற்றல் அனுபவம் தொடர்பாக மாணவர் பின்தங்குதல் பற்றி அறிந்துகொள்ளுதல் ஆசிரியருக்கு அவசியமானது". இதனைச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

iv. டேல் என்பவரின் கல்விசார் அனுபவக் கூம்பிலே குறிப்பிடப்பட்ட 'சித்திரவடிவ (iconic) அனுபவ வகைகள் நான்கினை வரிசைக் கிரமமாகக் கூறுக.

(02 புள்ளிகள்)

v. எண்ணக்கரு கற்பித்தலின்போது நிகழும் 'தன்மயமாக்கல்' செயல்முறையைச் சுருக்கமாக கூறுக.

(02 புள்ளிகள்)

vi. எண்ணக்கரு கற்பித்தலின்போது நிகழும் 'தன்னமைவாக்கல்' செயல்முறைக்கு இரண்டு உதாரணங்கள் எடுத்துக் காட்டுக.

(02 புள்ளிகள்)

vii. ஒரு பாடம் தொடர்பான பொருத்தமான கற்பித்தல் முறையைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் நான்கு எடுத்துக் காட்டுக.

(02 புள்ளிகள்)

viii. பாடமொன்றை நடைமுறைப்படுத்தும்போது நிறைவேற்ற வேண்டிய நோக்கங்கள் (விடயங்கள்) நான்கினைக் கூறுக.

(02 புள்ளிகள்)

ix. நடித்துக் காட்டுதல் இடம்பெறும் கற்றல் சந்தர்ப்பங்கள் இரண்டு குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

2. பின்வரும் சோடிகளிடையே காணப்படும் வேறுபாடுளைச் சுருக்கமாக விளக்குக.

அ) கற்றலும் கற்பித்தலும்

ஆ) செயல்நிலை அனுபவம் கருத்துநிலை அனுபவம்

இ) போலச் செய்தலும் பாத்திரமேற்று நடித்தலும்

ஈ) நேர் மீளவலியுறுத்தலும் எதிர் மீளவலியுறுத்தலும்

(5x4= 20 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

அ) நுண்பாகக் கற்பித்தலின்போது ஆசிரியர் ஒருவர் விருத்தி செய்ய வேண்டிய கற்பித்தல் திறன்கள்.

ஆ) குழுமுறைக் கற்பித்தலைத் திட்டமிடுதல்

இ) வகுப்பிலே வினாக்கேட்டலை முகாமைத்துவம் செய்தல்.

ஈ) ஆசிரியர் முன்மாதிரியை ஒழுங்கு செய்தல்

(10x2= 20 புள்ளிகள்)

4. i. ஒப்படை மூலம் கற்றல் மற்றும் செயற்றிட்டக் கற்றல் என்பவற்றை ஒப்பிடுக.

(10 புள்ளிகள்)

ii. குழு அடிப்படையில் ஒப்படை அல்லது செயற்றிட்டம் வாயிலாக மாணவர் பெற்றுக்கொள்ளக் கூடிய

அ) சமூகத் திறன்கள்

ஆ) தனியாள் திறன்கள் எவையெனச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

5. i. பின்வரும் கற்றல் சந்தர்ப்பங்களில் ஒப்பீட்டடிப்படையில் ஆசிரியருடைய வகிபாகத்தினை விளக்குக.

அ) வழிகாட்டப்பட்ட கண்டறிதல் முறைக்கான சந்தர்ப்பங்களைத் திட்டமிடுதல்

ஆ) படிமுறையாகப் பாடமொன்றினைக் கற்பதற்குத் திட்டமிடுதல்.

(5x2= 10 புள்ளிகள்)

ii. விரிவுரைமுறைக் கற்பித்தலைப் பயன்படுத்துவதிலுள்ள நன்மைகளையும் தீமைகளையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

6. i. பின்வரும் ஒவ்வொரு பாடப்பகுதியையும் கற்பிப்பதற்கு மிகவும் பொருத்தமான கற்பித்தல் முறையை காரணங்களுடன் குறிப்பிடுக.

அ) விசேட பிரயோகத்திறன்களைக் கற்பித்தல்

ஆ) நீரில் மூழ்கிய ஒருவருக்கு வழங்கும் செயற்கை சுவாசம்.

(10 புள்ளிகள்)

ii. விரும்பிய வகுப்பொன்றில் தெரிவுசெய்யப்பட்ட பாடமொன்றினை திட்டமிடும் முறையை விளக்குக.

(10 புள்ளிகள்)